# EVERWIN VIDHYASHRAM

STD: V L2 TAMIL TERM - I

## இயல் - 1 தமிழின் இனிமை (செய்யுள்)

**I. வினாக்களுக்கு விடையளி:**

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

கனியின் சுளையில் உள்ள சுவையும், முற்றிய கரும்புச் சாற்றின் சுவையும், மலரிலிருந்து எடுக்கப்பட்ட தேனின் சுவையும். காய்ச்சிய பாகின் சுவையும், சிறந்த பசு தந்த பாலின் சுவையும், தென்னை மரத்திலிருந்து பெறப்பட்ட குளிர்ந்த இளநீரின் சுவையும் இனிமையானவை என்று பாரதிதாசன் கூறுகிறார்.

2. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

பாரதிதாசன் தமிழை தன் உயிர் என்று கூறுகிறார்.

## 1.1 கவிதைப் பட்டிமன்றம் (உரைநடை) அறிவா? பண்பா?

**I. வினாக்களுக்கு விடையளி:**

1. அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை யார் யாரைக் குறிப்பிடுகிறார்?

திரு. டாக்டர் அப்துல்கலாம், திரு. தாமஸ் ஆல்வா எடிசன்

2. பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?

புத்தர், திருவள்ளுவர்.

3. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார், யாருக்குக் கொடுத்தார்?

உயிர் காக்கும் நெல்லிக்கனியை அதியமான் ஔவையாருக்கு கொடுத்தார்.

4. நடுவர் கூறிய தீர்பை உன் சொந்த நடையில் கூறுக?

இரு வழிகளுக்கு சமமானது அறிவும், பண்பும் என்று கூறுகிறார்.

5. ஐம்பொறிகள் யாவை?

மெய், வாய், கண், செவி, மூக்கு.

6. தமிழை சிறப்பிக்கும பெயர்களை பாடப்பகுதியிலிருந்து எடுத்து எழுதுக?

செந்தமிழ் நறுந்தேன் செம்மொழி முத்தமிழ்
நற்றமிழ் என்றெல்லாம் தமிழ் சிறப்பிக்கப்டுகிறது.

## 1.3 - என்ன சத்தம் (துணைப்பாடம்)

**I. வினாக்களுக்கு விடையளி:**

1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?

செழியன் ஆடுகளை மேய்சலுக்காக காட்டிற்கு ஓட்டிச் சென்றான்.

2. செழியன் செய்தவற்றை உம சொந்த நடையில் எழுதுக.

காட்டில் ஆடுகளை கொல்ல வந்த நரியின் மீது அம்பு எய்து ஆடுகளை காப்பாற்றினான்.

வீட்டிற்கு செல்லும் வழியில் சிங்கம், யானை ஆகியவற்றின் சத்தத்தைக் கேட்டும் தைரியத்ததுடன் ஆடுகளை மேய்த்துக் கொண்டு பாட்டியுடன் வீட்டிற்கு வந்தான்.

## 1.4 மரபுச் சொற்கள்

**I. வினாக்களுக்கு விடையளி:**

1. மரபு என்றால் என்ன?

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு எனப்படும்.

2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன?

* ஒலி மரபு * பெயர்மரபு (இளமைப்பெயர்) * வினை மரபு
* சினைப்பெயர் மரபு (உறுப்பு) *இருப்பிட மரபு

3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டு தருக?

* குரங்கு அலப்பும் * சிங்கம் கர்ஜிக்கும் * யானை பிளிறும்
* பாம்பு சீறும்

## இயல் - 2: 2.1 மூதுரை

**I. வினா விடை:**

1. கொக்கு எதற்காகக காத்திருக்கிறது?

கொக்கானது தனக்கு இரையாகக் கூடிய பெரிய மீன்கள் வரும் வரை அசைவின்றி காத்திருக்கும்.

2. யாரை அறிவில்லாதவர் என எண்ணிவிடக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?

தமக்குரிய காலம் வரும்வரை சிலர் அடங்கி இருப்பார்கள். அவர்களை அறிவில்லாதவர் என எண்ணிவிடக் கூடாது என்கிறார் ஔவையார்.

## 2.2 கல்விச் செல்வமும், பொருள் செல்வமும்

**I. வினா விடை:**

1. களர் நிலத்துக்கு ஒப்பாவர் - யார்?

கல்வி கற்காதவர் களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

2. கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?

பொருட்செல்வமே கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியதாகும்.

3. 'கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்' என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை உம் சொந்த நடையில் எழுதுக?

* கல்வி கற்காதவன் வறண்ட நிலத்திற்கு ஒப்பாவான்.
* கல்வி கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.
* கல்விச் செல்வமே இம்மைக்கும், மறுமைக்கும் பயன் தரும் கல்வி என்றும் அழியாதது
* கல்வி வளர்ச்சிதான் எல்லா முன்னேற்றத்திற்கும் காரணம்.
* கல்விதான் அறிவை வளர்க்கிறது.

4. பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்கு தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.

* பொருள்செல்வம் இல்லை என்றால் நமது தேவைகளை நிறைவேற்ற முடியாது.
* பணம் பத்தும் செய்யும், வாழ்க்கை நடத்துவதற்கு பணம் தேவை.
* கல்வி கற்பதற்கு கூட பணம் தேவை.

## இயல் - 2.3: வறுமையிலும் நேர்மை (துணைப்பாடம்)

**I. வினா விடை:**

1. பசியால் வாடிய ஊர் மக்களுக்கு பணக்காரர் எவ்வாறு உதவினார்?

பசியால் வாடிய ஊர் மக்களுக்கு கொழுக்கட்டை கொடுத்து உதவினார்.

2. சிறுமியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?

சிறுமியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு தங்கக் காசு ஆகும்.

## 2.4 - பெயர்ச்சொல், வினைச்சொல்

**I. வினா விடை:**

1. பெயர்ச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக?

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். எ.கா. குமரன், கண்ணகி.

2. வினைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக?

ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். எ.கா. ஓடினான், நடந்தான், படினாள்.

## இயல் - 3.1: இயற்கை - கடல்

**I. வினா விடை:**

1. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?

மீன், விலை மதிப்புடைய முத்துகள், சிப்பிகள்.

2. பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.

எல்லையில்லாத கடல் இரவும் பகலும் ஓய்வில்லாமல் அலைகளை வீசி ஒலித்துக் கொண்டிருக்கும். இந்த அலைகள் குதிரைகள் அணிவகுத்து வருவதைப் போல் காட்சியளிக்கும். மீன் வளங்களையும், முத்துகளையும், கொண்டுள்ளன. பூமியில் மழை பெறுவதற்கு காரணமாகவும் இருக்கின்றது. மழை நீரை சேமிக்கும் பெரிய கலனாகவும் விளங்குகிறது இதுவே இப்பாடல் உணர்த்தும் பொருள்.

## இயல் - 3.2: படம் இங்கே! பழமொழி எங்கே?

**I. வினா விடை:**

1. பழமொழி என்பது யாது?

நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகளே பழமொழிகள் ஆகும்.

2. விடுகதை என்றால் என்ன?

ஓரிரு வரிகளில் ஒரு பொருளை மறை பொருளாக விவரித்து தொடுக்கப்படும் ஒரு புதிரே விடுகதை ஆகும்.

3. கிளியைப் "பழமொழிக் கிளி" என அழைக்கக் காரணம் என்ன?

"செல்லம்மா" என்ற கிளி மாங்காய் காய்க்கும் பருவத்தில் வந்து சிறுவர்களிடம் ஒரு படத்தை காட்டும். அந்த படம் உணர்த்தும் பழமொழியைச் சிறுவர்கள் கூறிவிட்டால் ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால், அதைப் "பழமொழிக் கிளி" என்று அழைப்பர்.

4. இப்பாடத்தில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளை பட்டியலிடுக.

* யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
* இக்கரைக்கு அக்கரைப் பச்சை.
* ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்.
* ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
* காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
* அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்.

## 3.3 - தப்பிப் பிழைத்த மான்

**I. வினா விடை:**

1. நரி, காகத்திடமிருந்து ஏன் மானைப் பிரிக்க எண்ணியது?

கொழு கொழுவென இருக்கும் மானைக் கொன்று தின்றுவிட வேண்டும் என்று எண்ணி, எப்பொழுதும் இணைந்தே இருக்கும் காகத்தையும் மானையும் பிரிக்க எண்ணியது நரி.

2. நரியை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் காகம் கூறியது என்ன?

யாரையும் சீக்கிரமாக நம்பி விடாதே! அது நமக்குதான் ஆபத்து என்று மானிடம் காகம் கூறியது.

3. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?

நரி, மானை விவசாயி ஒருவரின் விளைச்சல் மிகுந்த நிலத்திற்கு அழைத்துச் சென்றது.

4. வலையில் மாட்டிக் கொண்ட மானைக் காகம் எவ்வாறு காப்பாற்றியது?

விவசாயி வரும் வரை நீ இறந்தது போல் அசையாமல் இரு, விவசாயி உன்னைப் பிடிக்க அருகில் வரும் போது நான் மரத்தில் இருந்து குரல் கொடுக்கிறேன் உடனே தப்பி விடு என்று மான் தப்பிக்க வழி கூறியது காகம்.

5. "தப்பிப் பிழைத்த மான்" கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொண்ட நீதி யாது?

"ஆபத்தில் உதவுபனே உண்மையான நண்பன்".

**பத்தியைப் படித்து வினாவிற்கு விடையளி:**

உடனுக்குடன் செய்திகளைப் பெறவும், பிறருக்கு அனுப்பவும் தொலைபேசி, வானொலி தொலைக்காட்சி, கைப்பேசி போன்றவற்றைப் பயன்படுததுகின்றோம். நமக்கு நன்மையை தரக் கூடிய ஊடகங்களை தவறாக பயன்படுத்துவது சைபர் குற்றம் எனப்படும். ஒருவரது புகைப்படத்தை அவருக்கு

தெரியாமல் எடுத்து தொலைபேசி எண்ணையும் முகவரியையும் இணையத்தில் வெளியிடுவது சைபர் குற்றமாகும்.

**விடையளி:**

1. நாம் பயன்படுத்தும் ஊடகங்களின் பெயர்களை எழுதுக.

   வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி.

2. ஊடகங்களின் பயன்கள் இரண்டினை எழுதுக.

   செய்திகளை பெறுதல், அனுப்புதல்.

3. சைபர் குற்றம் ஒன்றை எழுதுக.

   ஒருவருக்கு தெரியாமல் அவரது புகைப்படத்தையும் தொலைபேசி எண்ணையும் முகவரியையும் இணையத்தில் வெளியிடுதல்.

4. சைபர் குற்றம் என்பது யாது?

   நமக்கு நன்மையைத் தரக்கூடிய ஊடகங்களை தவறாக பயன்படுத்துவது.

5. இந்த பத்திக் கேற்ற தலைப்பு ஒன்றை எழுதுக.

   சைபர் குற்றம்.

## கடிதம்

தெரு விளக்கு வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு கடிதம்.

விடுநர்:

ரவி,
எண். 2, கம்பர் தெரு,
சென்னை - 99.

பெறுநர்:

மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
சென்னை மாநகராட்சி,
சென்னை - 99.

ஐயா,

பொருள்: தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம்

மதிப்பிற்குரிய ஐயா,

அவர்களுக்கு வணக்கம் நாங்கள் வசிக்கும் தெருவில் விளக்குகள் எரியாமல் பழுதடைந்துள்ளன. எனவே எங்கள் தெருவில் உள்ள வாகனங்கள் மற்றும் பொருட்கள் களவு போகின்றன. ஆகவே தாங்கள் எங்கள் தெருவில் உள்ள விளக்குகளை சரிசெய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
ரவி

## கட்டுரை: வளைதடிப் பந்தாட்டம் (ஹாக்கி-Hockey)

**முன்னுரை:**

ஹாக்கி என்பது ஒரு குழு விளையாட்டாகும் ஒரு கடினமான பந்தினை விளையாட்டு வீரர்கள் மட்டையினால் நகர்த்தி விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டு இந்தியாவின் தேசிய விளையாட்டு ஆகும்.

**பொருளுரை:**

* ஆடுகளம் செவ்வக வடிவ அமைப்பாகும். இதன் நீளம் 100 கெஜம், (yard) அகலம் 60 கெஜம். (yard)

* வெற்றிக் கம்பத்தின் அகலம் 12 அடி, உயரம் 7அடி இருக்க வேண்டும்.

* ஆட்டக்காலம் 75 நிமிடங்கள்.

* ஆட்டக்காரர்கள் 11 பேர் மாற்று ஆட்டக்காரர்கள் 5 பேர் ஆவர்.

**முடிவுரை:**

இது போன்ற விளையாட்டுகள், பகுத்தாய்ந்து சிந்தித்தல், கவனத்தை ஒரு முகப்படுத்துதல், கணக்கிடுதல் முதலிய திறன்களை வளர்த்துக் கொள்ளவும் உதவுகின்றன.